பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 06 ஞாயிற்றுக்கிழமை 21.12.2025 கதிர் 043

## இனி இது ரகசியம் அல்ல!

எட்டு மாதங்களாக கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஒருவரை நியமிக்காமல் இருப்பதற்காக ஆளும்தரப்பு இப்போது பல தரப்பினரிடமிருந்தும் ☞ 2

# 13ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் அரசியல் அதிகாரத்தை பகிருங்கள்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்து

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று, நாட்டின் அனைத்து இன மக்களும் கௌரவத்துடனும், சம உரிமையுடனும் வாழக்கூடிய அதிகாரப் பகிர்வு முறையை உருவாக்க வேண்டும் என்று லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் பழமையான மற்றும் முதன்மையான இடதுசாரிக்கட்சியான லங்கா சமசமாஜக், தனது 90ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு கொழும்பில் விசேட மாநாடு நேற்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் உரையாற்றுபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விஞ்ஞானமற்றும்தொழில்நுட்பஅமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் முன்னெடுத்த 'விதாத்த' வேலைத்திட்டத்தின்; மூலம் நாடு தழுவிய ரீதியில் சுமார் 50,000க்கும் மேற்பட்ட சிறு தொழில்முயற்சியாளர்களை உருவாக்கி, நவீன தொழில்நுட்பத்தைக் கிராமங்களுக்குக் கொண்டு சேர்த்த வெற்றியின் அனுபவத்தை பெருமையோடு கூறுகிறேன். இவ்வாறான உற்பத்தி சார்ந்த பொருளாதார முன்னெடுப்புகளே நாட்டின் தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடிக்கும், வேலையின்மைக்கும் ☞ 2

## ஜனவரியில் இந்தியா பறக்கிறார் ரில்வின்

ஜேவிபியயின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா 2026 ஜனவரியில் இந்தியாவுக்கு பயணம் செய்யவிருக்கிறார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது. அவர் கடந்த நவம்பர் இறுதியில் இந்தியாவுக்கு சென்றிருக்கவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் இருந்தன. ஆனால் தித்வா பேரிடர் காரணமாக அந்தப் பயணம் தடைப்பட்டது. ரில்வினின் இந்தியப் பயணத்தில் அதியுயர் ☞ 2

# இலங்கையில் அரசமைப்பு மறுசீரமைப்புக்கு ஆதரவளிக்கும் செயற்பாட்டை ஆரம்பிக்குக

## பிரித்தானிய பிரதமரிடம் அந்நாட்டு தமிழர் பேரவை வலியுறுத்து

தற்போதைய சூழ்நிலையில் கட்டமைப்பு ரீதியான மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற வலுவான ஊக்குவிப்புடனேயே இலங்கைக்கு சர்வதேச உதவிகள் வழங்கப்படவேண்டும். அத்தோடு சர்வதேசப் பங்காளிகளுடன் இணைந்து இலங்கையில் நிலவும் மோதல்களை முடிவுக்குக்கொண்டுவருவதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும், அரசமைப்புமற்றும்கட்டமைப்பு மறுசீரமைப்புக்களுக்கு ஆதரவளிப்பதற்குமான செயன்முறையொன்றை ஆரம்பியுங்கள் என பிரித்தானியபிரதமர்கெய்ர்ஸ்ராமரிடம்பிரித்தானியத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து பிரித்தானியத் தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் ரவிக்குமாரினால் பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்ராமருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் தெரிவிகப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் ஏற்பட்ட 'தித்வா' சூறாவளியினால் பல உயிர்கள் பறிபோயிருப்பதுடன் உட்கட்டமைப்பு வசதிகள், விவசாயம், வாழ்வாதாரம், சூழலியல் மற்றும்நீர்வளங்கள்எனமிகப்பெரும்அளவுசேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏற்கனவே நாட்டை ☞ 2

# கஞ்சா தோட்டத்தை சுற்றிவளைத்த பொலிஸ் அலுவலருக்கு இடமாற்றம்?

## ஆளும்தரப்புத் தொடர்பே காரணமா?

சூரியகந்த பொலிஸ் பிரிவில் கஞ்சா பயிர் செய்கை தொடர்பில் சுற்றி வளைப்பினை முன்னெடுத்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த பயிர் செய்கையுடன் அரசாங்கத்தின்அரசியல்வாதியொருவர் தொடர்புபட்டுள்ளமையே இதற்கான காரணமாகும். இதேபோன்று இன்று அரசாங்கத்துடன் தொடர்புடைய பலரும் தமது சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா குற்றஞ்சுமத்தினார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை ☞ 6

## 8 பிரதேச செயலர் பிரிவுகளில் மண் சரிவு எச்சரிக்கை நீடிப்பு

கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் 8 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய கண்டியில் மினிப்பே, உடுதும்பர, தொலுவ மற்றும் மெததும்பர பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும், நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை, மதுரட்ட, நில்தண்டாஹின்ன ☞ 2

# டிசெம்பர் 31க்கு முன்னராகவே ரூ 75,000 ஐ வழங்கி முடியுங்கள்

## அதிகாரிகளுக்கு அரசுத் தலைவர் அறிவுத்தல்

இழப்பீடு வழங்கும் செயற்பாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், அந்தப் பணிகளை செயற்திறனுடன் முன்னெடுக்கவும் எவரையும் ☞ 2

# பாஜகவின் தமிழ்நாடு தலைவரை சந்தித்துப் பேசியது முன்னணி

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வாக இலங்கை அரசு 'ஏக்கிய இராச்சிய' அரசமைப்பினைத் திணிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் அதனைத் தடுத்து தமிழர்களுக்கான அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி ☞ 6

# போதைப்பொருள் விற்பனை நிலையமாக பல்கலைப் பீடம்

## பிரதமர் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

போதைப்பொருட்களை விற்பனை செய்யும் மத்திய நிலையமாக பல்கலைக்கழக பீடமொன்று காணப்படுகின்றமை தொடர்பில் புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளன. ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கடுமையானவிமர்சனங்களைஎதிர்கொள்கிறது. அனைத்து அரச செலவினங்களை கணக்காய்வு செய்து மோசடிக்ளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு வாய்ந்த முக்கிய பதவி இது என்பதால், ஊழல் இல்லாத நாட்டை உருவாக்குவதற்கான அரசுத் தலைவரின் தேர்தல் பரப்புரையின்போது வாக்குறுதியை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவிமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

இந்தப் பதவிக்குத் தொடக்கத்தில் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் இயக்குநரான சந்தனாவின் பெயரை அரசுத் தலைவர் அநுரகுமார முன்மொழிந்தார். அவர் அரசுத் தலைவரின் நெருங்கிய கூட்டாளி மற்றும் பல்கலைக்கழக சமகாலத்தவர் என்றும், தணிக்கையாளர் நாயகத் துறையில் அனுபவம் வாய்ந்த மற்றும் தகுதிவாய்ந்த மூத்த அதிகாரிகள் இருக்கும்போது அத்தகைய நியமனம் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் கூறி அரசமைப்புச் சபை அந்தப் பரிந்துரையை ஏற்க மறுத்திவட்டது. இதனால் பதில் கணக்காய்வாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

பின்னர், அரசுத்தலைவர் மூத்த துணைக் கணக்காய்வாளர் நாயகம் ஜெயரத்னவைப் பரிந்துரைத்தார், ஆனால் அரசமைப்புச் சபை அந்தப் பெயரையும் நிராகரித்தது. கடந்த புதன்கிழமை, அரசுத் தலைவர் இராணுவத்தின் கணக்காய்வு அதிகாரியான ரணசிங்கவை முன்மொழிந்தபோது அரசமைப்புச் சபையினர் அதனையும் நிராகரித்துவிட்டனர். இதன்போதுதான் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் இராணுவ அதிகாரியை சிவில் பதவி ஒன்றுக்கு நியமிக்க ஆளும்தரப்புடன் சேர்ந்து வாக்களித்தார் என்ற சர்ச்சை ஒன்று கிளம்பியுள்ளது.

நிராகரிக்கப்படவாய்ப்புள்ளநபர்களின்பெயர் களை ஜனாதிபதி ஏன் தொடர்ந்து பரிந்துரைக் கிறார்? தகுதிவாய்ந்த மூத்த அதிகாரிகள் துறைக்குள் இருக்கும்போது இளநிலை அதிகாரிகள் ஏன் முன்மொழியப்படுகிறார்கள்? தற்போதைய அரசமைப்புச் சபையின் பதவிக் காலம் முடிவடையும் தை வரை அரசுத் தலைவர் வேண்டுமென்றே செயல்முறையை இழுத்தடிக்கிறார் என்று பலரும் சந்தேகிக்கின்றனர்.

அரசுத் தலைவரால் செய்யப்படும் உயர் மட்ட நியமனங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்கும், சிவில் சேவையில் அரசியல் தலையீட்டைத் தடுப்பதற்கும், நல்லாட்சிக் காலத்தில் அரசமைப்புச்சபைநிறுவப்பட்டது. தற்போதைய சபையின் அதிகாரப்பூர்வ பதவிக்காலம் ஜனவரியில் முடிவடையும் நிலையில், சிவில் பிரதிநிதிகளுக்கான புதிய நியமனங்கள் ஜனவரியில் செய்யப்படும். அதில் தமக்கு வாகானவர்களைத் தெரிவு செய்வதன் மூலம் தம் விருப்பப்படி செயற்படமுடியும் என்று ஆளும்தரப்பினர் கருதுகின்றனர் என்று கூறப்படுகிறது. அதனாலேயே அரசுத் தலைவர் கணக்காய்வாளர் நியமனத்தைச் செய்யாமல் இழுத்தடித்து வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆட்சிகளில், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க போன்ற முன்னாள் அரசுத் தலைவர்களும் நாட்டில் ஜனநாயகத்தை சீர்குலைக்கும் இதேபோன்ற ஊழல் நிறைந்த அரசியல் உத்திகளைக் கையாண்டிருக்கிறார்கள். உதாரணமாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபர் (ஐஜிபி) நியமனத்தின் போது இதுபோன்ற நடைமுறைகளில் ஈடுபட்டார்.

பல சந்தர்ப்பங்களில், அரசமைப்பு சபை தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபராக்கும் பரிந்துரையை நிராகரித்தது, அவரை ரணில் மீண்டும் மீண்டும் அந்தப் பதவிக்கு முன்மொழிந்தார். சபையும் தொடர்ந்து அவரது பரிந்துரைய மறுத்தபோது ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றீட்டை முன்மொழிவதற்குப் பதிலாக, ரணில் தென்னகோனை பதில் ஐஜிபியாக நியமித்தார். பலமுறை நிராகரிக்கப்பட்ட பிறகும், தென்னகோனை நிரந்தரமாக நியமிக்க ரணில் தொடர்ந்து அவரது பெயரை முன்மொழிந்தார். இறுதியில், சபையின் வாக்கை சமநிலைப்படுத்தி, அதன் வாயிலாக சபாநாயகரை வாக்களிப்புக்கு இழுத்து வந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபராக ரணில் நியமித்தார் என்பதே வரலாறு. அப்படி ரணில் செய்த இந்த நியமனத்திற்கு எதிரான நீதிமன்ற வழக்கு இன்னும் நடந்து வருகிறது.

தற்போதைய ஆளும்தரப்பும் இதுபோன்ற முன்னுதாரணங்களைப் பின்பற்றக்கூடும் என்பதைக் குறிக்கவே இந்த உதாரணம் மேற்கோள் காட்டப்படுகிறது..

இடிமின்னல்
(idiminnal@gmail.com

## 13ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வாக அமைய முடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காக, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவராகத் நான் முன்னெடுத்த அதிகாரப் பகிர்வுத் திட்டங்கள் இன்றும் காலாவதியாகவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று, நாட்டின் அனைத்து இன மக்களும் கௌரவத்துடனும், சமஉரிமையுடனும்வாழக்கூடியஒருஅதிகாரப் பகிர்வுமுறையைஉருவாக்குவதேசமசமாஜக் கட்சியின் நீண்டகால நிலைப்பாடாகும். பிரித்தானியகாலனித்துவக்காலத்தில்சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சம மதிப்பு வழங்கப்பட வேண்டும் என்று 1950களிலேயே இக்கட்சி தீர்மானம் நிறைவேற்றிய வரலாற்றுத் தூரநோக்கை மீண்டும் நினைவூட்டுகின்றேன்.

தற்போதைய அரசியல் சவால்களை எதிர்கொள்ள இடதுசாரி சக்திகளின் ஒற்றுமை மிக அவசியமானது. 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசமைப்பை உருவாக்குவதில் கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா ஆற்றிய வரலாற்றுப் பணியைப் போன்றே, தற்போதையகாலத்திலும்புதியதொருஅரசியல் கலாசாரத்தை உருவாக்க இடதுசாரிகள் கைகோர்க்க வேண்டும். 90 ஆண்டுகால அரசியல்அனுபவமும், நேர்மையும்கொண்ட லங்கா சமசமாஜக் கட்சி, ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகத் தொடர்ந்து ஒலிக்கும் என்பதை இம்மாநாடு மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியது என்றார்.

## இலங்கையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீளக்கட்டியெழுப்புவதில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்த ஆளும்தரப்புக்கு, சூறாவளி பேரிடரின் பின்னரான தற்போதைய சூழ்நிலை மேலும் சவால் மிகுந்ததாக மாறியிருக்கின்றது.

இவ்வேளையில் சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்கு நன்றி கூறும் அதேவேளை, நிலையான மீட்சியை அடைவதற்கு உள்ளக ஆட்சியியல் கட்டமைப்பு தொடர்பான இறுக்கமான மீள்மதிப்பீட்டை மேற்கொள்வது அவசியமாகும். குறிப்பாக எவ்வித இன, மத, மொழி பேதங்களுமின்றி நாட்டுமக்கள் மத்தியில் அதிகாரமும், பொறுப்பும் நியாயமான முறையில் பகிரப்படுவதன் ஊடாக மாத்திரமே நாட்டை வெற்றிகரமாக மீளக்கட்டியெழுப்பமுடியும்.

ஒரு காலத்தில் ஆசியப்பிராந்திய அபிவிருத்தியின் முன்மாதிரியாக நோக்கப்பட்ட இலங்கை, இன்று தீவிர பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதுடன் 'தித்வா' சூறாவளி காரணமாக அந்நெருக்கடி மேலும் தீவிரமடைந்துள்ளது. நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு சுமார் 7 பில்லியன் டொலர் நிதி தேவை என மதிப்பிடப்பட்டிருக்கும் அதேவேளை, மொத்த வெளியகக் கடன்களின் பெறுமதி 57 பில்லியன் டொலராகவும், 2025 இல் வர்த்தகப்பற்றாக்குறை 7 பில்லியன் டொலராகவும் பதிவாகியிருக்கின்றது. எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணை முடிவுக்குவரும் நிலையில், நாடு பெரும் பொருளாதாரப் பேரழிவுக்கு முகங்கொடுக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

எனவே கட்டமைப்பு மற்றும் நிறுவன ரீதியான மறுசீரமைப்புக்களும், அரசமைப்பு மறுசீரமைப்பும் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற வலுவான ஊக்குவிப்புடன் சர்வதேச உதவிகள்வழங்கப்படவேண்டும். அர்த்தமுள்ள நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு தமிழ் மக்களின் அபிலாஷைகள் கருத்திற்கொள்ளப்படவும், ஒடுக்குமுறை கலாசாரம் முடிவுக்குக்கொண்டுவரப்படவும் வேண்டும். அத்தகைய மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படாவிடின், இலங்கை வன்முறைகள், இனவழிப்பு மற்றும் உறுதியற்றதன்மைஎன்பவற்றுக்குள்மீண்டும் சிக்கக்கூடிய அச்சுறுத்தல் நிலைக்குள்ளேயே இருக்கும்.

எனவே சர்வதேசப் பங்காளிக ளுடன் இணைந்து இலங்கையில் நிலவும் மோதல்களை முடிவுக்குக்கொண் டுவருவதற்கும், நீதியை நிலைநாட்டுவதற் கும், அரசமைப்பு மற்றும் கட்டமைப்பு மறுசீரமைப்புக்களுக்கு ஆதரவளிப் பதற்குமான செயன்முறையொன்றை விரைந்து ஆரம்பிக்குமாறு கோருகின்றோம் என்றுள்ளது.

## 8 பிரதேச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஹங்குராங்கெத்த ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளுக்கே இவ்வாறு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பதுளை, கண்டி, குருணாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த இரண்டாம் மற்றும் முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கைகளும் தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என்றும், சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்றுவீசக்கூடும்எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில்பனிமூட்டமானநிலைகாணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலி கமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைகுறைத்துக்கொள்ளதேவையான முன்னெச்சரிக்கைநடவடிக்கைகளைஎடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத் தப்பட்டுள்ளனர்.

## டிசெம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைவிடாத வகையில் இழப்பீடு பெற உரிமை உள்ள அனைவருக்கும் அதனை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

வீடுகளைசுத்தம்செய்வதற்குஆளும்தரப்பு வழங்கும் 25,000 ரூபா, வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவதற்கு வழங்கும் 50,000 ரூபா ஆகிய உதவித்தொகைகளை டிசம்பர் 31க்கு முன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அரசுத் தலைவர் அறிவுறுத்தினார்.

இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல் வேலைத் திட்டத்தின் கீழ் மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப மாவட்ட அளவில் திட்டமிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் மற்றும் அதன்போது எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான விசேட கலந்துரை யாடல் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தலைமையில், பாதுகாப்பு, விவசாயம், நீர்ப்பாசனம், நீர் வழங்கல், மீன்பிடி, போக்குவரத்து, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் ஆகிய துறைகளைச் சேர்ந்த அமைச்சுகளின் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அனைத்து மாவட்ட செயலாளர்களின் பங்கேற்புடன் நேற்று அரசுத் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

மேலும், வீடுகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்குதல், நாடு பூராகவும் பராமரிக்கப்படும் பாதுகாப்பு மையங்களின் செயல்பாடுகள், மக்களை மீளக் குடியமர்த்தல், வாழ்வாதாரங்களைமீண்டும்கட்டியெழுப்புதல் மற்றும்உட்கட்டமைப்புவசதிகளைமேம்படுத்த மாவட்ட அளவில்மேற்கொள்ளப்படும்வேலைத் திட்டங்கள் மற்றும் அதன் முன்னேற்றம் ஆகியவை இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

மக்களை மீள்குடியேற்றுவது மற்றும் அதற்குத் தேவையான காணிகளை அடையாளம் காண்பது குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், பிரதான மாவட்டங்களில் செயல்படுத்தப்பட வேண்டிய வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் தனியான திட்டத்தைத் தயாரிப்பதற்கும், அனைத்து தரப்பினரின் பங்களிப்புடன் இது தொடர்பாக மீண்டும் கலந்துரையாடல் நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசுத் தலைவர் தெரிவித்தார்.

அதிக ஆபத்துள்ள பகுதிகளில் இருந்து மக்களை உடனடியாக வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்ற வேண்டியதன்அவசியத்தையும்சுட்டிக்காட்டிய அரசுத் தலைவர், வீட்டு சேதங்களுக்கு இழப்பீடு வழங்கும்போது அத்தகைய நடவடிக்கைகளை நியாயமானதாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயல்படுத்த வேண்டியதன்அவசியத்தையும்விளக்கினார்.

பெரும் போகத்திற்கு விவசாயிகளை தயார்படுத்துவதற்காக நீர்ப்பாசன கட்டமைப்புகளின் புனரமைப்பு, இழப்பீடு மற்றும் விதை நெல் உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்கான வேலைத் திட்டங்களின் செயல்பாட்டையும் இதன்போது அரசுத் தலைவர் கேட்டறிந்தார்.

மேலும், சேதமடைந்த கால்நடை பண்ணைகளுக்கு இழப்பீடு வழங்கி, அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் தொடங்குதல், பேரிடர்த்தினால் பாதிக்கப்பட்ட சிறு வர்த்தகங்களை மீண்டும் ஆரம்பிக்க உதவுதல், மீன்பிடித் தொழிலை மீட்டெடுப்பது மற்றும் பாடசாலை மாணவர்களுக்காக ஆளும்தரப்பு வழங்கும் 15,000 ரூபா உதவித்தொகையை உடனடியாக வழங்கி நிறைவு செய்தல் போன்ற வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இங்கு கலந்துரையா ப்பட்டது.

சேதமடைந்த கடவுச்சீட்டுகள் மற்றும் அடையாள அட்டைகளை மீண்டும் வழங்குவதற்கான வேலைத்திட்டம் குறித்தும் அரசுத் தலைவர் கேட்டறிந்தமை குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான செயற்பாடுகளும், பகிடிவதை என்றபெயரில்இடம்பெறும்துன்புறுத்தல்களும் தடுக்கப்படாவிட்டால் பல்கலைக்கழக கட்டமைப்பைப் பாதுகாக்க முடியாது என பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

கல்விஅமைச்சில்இடம்பெற்றநிகழ்வொன் றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

2025ஆம் ஆண்டிலும் பகிடிவதை குறித்துபேசிக்கொண்டிருப்பது உண்மையில் கவலைக்குரிய விடயமாகும். பல்கலைக்கழக கலாசாரமொன்றை பேணிச் செல்வதற்கு பகிடிவதை தேவை என்று எண்ணினால், அது பாரதூரமான பிரச்சினையாகும். உப வேந்தர் முதல் அலுவலக உத்தியோகத்தர்கள் வரை யாரைக் கேட்டாலும் தமது பல்கலைக்கழகத்தில் பகிடிவதை இல்லை என்கின்றனர். ஆனால் மாணவர்கள் உயிரிழக்கின்றனர். பல்கலைக்கழகத்தை விட்டு இடை விலகுகின்றனர். இவை யாருக்கும் தெரியவில்லையா?

தற்போது பதிவாகும் சம்பவங்களை தொடர்ந்தும் பகிடிவதை என்றுகூட விளிக்க முடியாது. அவை பகிடிவதைகளுக்கு அப்பாற்பட்ட கொடூரமான வன்முறைகளும், துன்புறுத்தல்களுமாகும். சமூகத்தில் மிகவும் கீழ்மட்டத்திலிருந்து பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் இங்கு வரும் மாணவர்களே

தொடர்ச்சி 06ம் பக்கம்....


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜனநாயகத்தின் மீது விழும் நீண்ட நிழல்

அரசுகள் மேடைகளில் உரக்கச் சொல்வதைவிட, அமைதியாகச் செய்வதில்தான்தங்களின்உண்மையானநோக்கங்களைவெளிப்படுத்துகின்றன என்பார்கள். அந்த வகையில், கடந்த டிசம்பர் மாத நடுப்பகுதியில், விடுமுறை காலத்தின் மந்தமான சூழலில், நீதியமைச்சின் இணையதளத்தில் அமைதியாக வெளியிடப்பட்ட ‘பயங்கரவாதத்திலிருந்து அரசைக் காக்கும் சட்டமூலம்’ (Protection of the State from Terrorism Bill) இலங்கையின் ஜனநாயக அரசியலில் ஒரு முக்கியமான, அதே நேரத்தில் கவலைக்குரிய தருணமாக அமைந்துள்ளது.

சீர்திருத்தம், நவீனமயமாக்கல் என்ற அழகான சொற்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும், இந்தச் சட்டமூலம், கடந்த பல தசாப்தங்களாக நாட்டின் சட்ட வரலாற்றில் கருமையான மாசாகத் திகழ்ந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) நிழலைத் தன்னுடன் சுமந்து வருகிறது.

1979ஆம் ஆண்டு ‘தற்காலிக’ நடவடிக்கையாக கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டம், காலப்போக்கில் நிரந்தரமான அடக்குமுறை கருவியாக மாறியது. நீதிமன்ற விசாரணை இன்றி நீண்டகாலக் காவல், சித்திரவதை, கருத்து வேறுபாடுகளை அடக்கும் முயற்சிகள் என அதன் கீழ் நடந்த அநீதிகள் எண்ணற்றவை. அதிலும் இந்தச் சட்டத்தால் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களும் துயரங்களும் ஒடுக்குமுறைகளும் சொல்லிமாளாதவை.

போர் காலத்தில் மட்டுமல்ல, போர் முடிந்த பின்பும், பத்திரிகையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் எதிரிகள் என பலரும் அந்தச் சட்டத்தின் கொடூரத்தை அனுபவித்தனர். ஆகவே, “பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றிலும் நீக்குவோம்” என்ற அரசியல் வாக்குறுதி மக்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையை உருவாக்கியது. குறிப்பாக, ஒருகாலத்தில் அதே சட்டத்தின் பாதிப்பை அனுபவித்த அரசியல் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் இன்று ஆட்சியில் இருப்பது, அந்த வாக்குறுதியை மேலும் வலுப்படுத்தியது.

இந்தப் பின்னணியில்தான் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை மதிப்பிட வேண்டும். அதன் உள்ளடக்கம் மட்டுமல்ல, அது கொண்டு வரப்பட்ட விதமும் முக்கியமானது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறு, மக்கள் மைய ஆட்சி எனப் பேசும் ஒரு அரசு, இத்தனை முக்கியமான சட்டத்தை பொதுமக்கள் விவாதமின்றி, நாடாளுமன்றம் விடுமுறையில் இருக்கும் வேளையில், பண்டிகைக் கால அமைதியைப் பயன்படுத்தி வெளியிடுவது, சந்தேகங்களை எழுப்பாமல் இருக்க முடியாது.

முன்னைய நிர்வாக காலத்திலும் இதுபோன்ற ஒரு முயற்சி நடந்தது. அப்போது, தெளிவற்ற வரையறைகள், கருத்து சுதந்திரத்துக்கு ஏற்படும் ஆபத்துகள் என்பவற்றைக் காரணமாக்கி அரசியல் கட்சிகளும் மனித உரிமை அமைப்புகளும் கடுமையாக எதிர்த்தன. உச்சநீதிமன்றம் கூட சில அரசியல் சட்ட சிக்கல்களை சுட்டிக்காட்டியது. இப்போதும் அந்த பரிந்துரைகள் சேர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால், அரசின் நடத்தைதான் கேள்விக்குறியாகிறது.

பயங்கரவாதம் இன்று மாறியிருக்கிறது. இணையவழி தாக்குதல்கள், சர்வதேச நிதி வலைப்பின்னல்கள், முக்கிய உட்கட்டமைப்புகளின் மீது தாக்குதல் ஆகியவை நவீன அரசுகளுக்குப் புதிய சவால்கள். அதனை எதிர்கொள்ள சட்டங்கள் தேவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், பிரச்சினை சட்டத்தின் அவசியம் அல்ல; அதன் இயல்பும், அதை அமல்படுத்தும் அரசியல் பண்பாடும்தான்.

இந்தச் சட்டமூலத்தின் மையப் பிரச்சினை ‘பயங்கரவாதம்’ என்ற சொல்லின் வரையறை. “அரசை அல்லது பொதுமக்களை அச்சுறுத்துதல்”, “அரசை கட்டாயப்படுத்துதல்”, “அத்தியாவசிய சேவைகளில் இடையூறு” போன்ற சொற்றொடர்கள், காகிதத்தில் பார்க்கும்போது விரிவான பாதுகாப்பாகத் தோன்றலாம். ஆனால், நடைமுறையில், இத்தகைய பரந்த சொற்கள், போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள், குடிமக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் வரை பயங்கரவாதமாக முத்திரை குத்தப்படுவதற்கான வாயிலைத் திறக்கின்றன.

தண்டனைகளும் அதீதமானவை. ஆயுள் தண்டனை, கடும் சிறை, கோடிக்கணக்கான அபராதம் ஆகியவை, இவ்வளவு விரிவான வரையறைகளுடன் இணைக்கப்படும்போது, அநீதிக்கு இடம் பெரிதாகிறது. அரசாங்கம் சில சீர்திருத்தங்களை முன்வைக்கிறது. காவல்துறையிடம் பெறப்படும் ஒப்புதல்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படாது, நீதிவான்களின் கண்காணிப்பு அதிகரிக்கப்படும், வழக்கறிஞர் அணுகல் உறுதி செய்யப்படும் என சில நல்ல அம்சங்கள் உள்ளன. ஆனால், அவை எல்லாம் அடிப்படை கட்டமைப்பை மாற்றுகிறதா என்றால் பதில் தெளிவில்லை.

இன்னும், இராணுவம் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரம், நீண்டகாலக் காவல் உத்தரவு, அரசுத் தலைவரின் “மறுவாழ்வு” என்ற பெயரில் வழங்கப்படும் பரந்த அதிகாரங்கள், பயங்கரவாத் தடைச் சட்டத்தின் அடிப்படை தத்துவத்தையே நினைவுபடுத்துகின்றன.

அதைவிட கவலைக்குரியது, மின்னணு கண்காணிப்பு, தகவல் மறையீடு (encryption) உடைப்பதற்கான அதிகாரங்கள். இன்று அரசியல் செயற்பாடுகளும் பத்திரிகையியலும் இணையவழியே நடைபெறும் சூழலில், இத்தகைய அதிகாரங்கள் கட்டுப்பாடின்றி இருந்தால், அது பாதுகாப்பைக் காட்டிலும் கண்காணிப்புக்கான கருவியாக மாறும்.

இந்தச் சட்டத்தின் அவசரத்துக்கு சர்வதேச அழுத்தங்களும் காரணம். ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிபிஎஸ் பிளஸ் சலுகைகள், மனித உரிமை உறுதிமொழிகள் ஆகியவை காலக்கெடு விதிக்கின்றன. ஆனால், சட்டச் சீர்திருத்தம் ஒரு வர்த்தக பரிவர்த்தனையாக மட்டுமே பார்க்கப்படும்போது, அதன் நெறிமுறை மதிப்பு குறைகிறது.

ஒருகாலத்தில் பயங்கரவாத் தடைச் சட்டத்திற்கு எதிராகத் தெருவில் நின்று போராடிய அரசியல் சக்திகளே இன்று, அதே அடக்குமுறை மையத்தை புதிய பெயரில் கொண்டு வர முயல்கிறார்கள் என்றால், அது வரலாற்றின் கொடூரமான பரிதாபம். அதிகாரம் எப்போதும் நண்பர்களின் கைகளில்தான் இருக்கும் என்ற நம்பிக்கையில் எழுதப்படும் சட்டங்கள், நாளை அதையே கேள்வி கேட்பவர்களைத் தாக்கும் ஆயுதமாக மாறும்.

இலங்கை இன்று ஒரு பழக்கமான சந்திப்பில் நிற்கிறது. கடந்த காலத்தின் சட்ட அடக்குமுறையிலிருந்து உண்மையான விடுதலையா, அல்லது அதையே மெல்லிய மொழியில் மறுபேக்கிங் செய்வதா என்ற தேர்வு. மக்கள் மைய ஆட்சியை உண்மையாக விரும்பும் அரசு என்றால், இந்த சட்டமூலத்தை தற்காலிகமாக நிறுத்தி, திறந்த பொதுக் கலந்தாய்வை நடத்தி, எழும் அச்சங்களை நேர்மையாக எதிர்கொள்ள வேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் சமூகத்தின் உரிமையுடன் இணைந்ததாக இருக்க வேண்டும். அது அமைதியாக நுழையக் கூடாது; வெளிச்சத்தில் விவாதிக்கப்பட வேண்டும். இல்லையெனில், பயங்கரவாதத் தடைச் சட்டம் போலவே, இந்தச் சட்டமும் இலங்கையின் ஜனநாயக மனச்சாட்சியில் இன்னொரு நீங்காத களங்கமாக மாறும்.

# சாவைத் தந்த சர்ச்சைக்குரிய மருந்து பற்றி சர்வதேச பரிசோதனை கேட்கிறது நிறுவனம்

நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள ‘ஒன்டன் செட்ரான்‘ மருந்து தயாரிப்பு நிறுவனமான ‘மான் பார்மாசூட்டிகல்ஸ்‘ (Maan Pharmaceuticals) , சர்ச்சைக்குரிய குறித்த மருந்தை சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்தில் (International accredited laboratory) பரிசோதனைக்கு உட்படுத்துமாறு இலங்கை சுகாதார அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த நிறுவனம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை (NMRA), அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் (SPC) மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவு (MSD) ஆகியவற்றுக்கு கடிதம் ஒன்றின் மூலம் இந்தக் கோரிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

சர்வதேச ரீதியிலான இந்தப் பரிசோதனைக்கு ஆகும் அனைத்துச் செலவுகளையும் ஏற்கத் தாங்கள் தயாராக இருப்பதாக மான் பார்மாசூட்டிகல்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளதை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை தலைவர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம உறுதிப்படுத்தியுள்ளார்.

பக்கவிளைவுகள் ஏற்பட்டதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து இலங்கையில் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட சர்ச்சைக்குரிய ‘ஒன்டன்செட்ரான்‘, மான் பார்மாசூட்டிகல்ஸ் நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 10 வகையான ஊசி மருந்துகளின் பயன்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்ச்சைக்குரிய மருந்து தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்காதது ஏன்?

### சுகாதார அமைச்சிடம் கேள்வி எழுப்புகிறது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சர்ச்சைக்குள்ளாகியுள்ள ‘ஒன்டன்செட்ரான்‘ மருந்து தொடர்பில் கண்டி வைத்தியசாலை ஆய்வுகளைச் செய்து அறிவிக்கும் வரை சுகாதார அமைச்சோ அல்லது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையோ ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? குருதியில் நேரடியாக ஏற்றப்படும் இந்த மருந்துகள் கிருமித் தொற்றுடன் வழங்கப்பட்டது பெரும் குற்றமாகும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

உள்நாட்டிலேயே மருந்து தரப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் ஆய்வகத்தை உடனடியாக நிறுவவேண்டும் என்றும், தரமற்ற மருந்துகளை நாட்டுக்குள் கொண்டுவர அனுமதித்த மற்றும் தமது கடமையைச் செய்யத் தவறிய அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆளும்தரப்பிடம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய சங்கத்தின்பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த டிசம்பர் 12 மற்றும் 15 ஆகிய நாள்களில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை (NMRA) ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. இந்திய நிறுவனமான ‘மான் பார்மாசூட்டிகல்ஸ்‘ (Maan Pharmaceuticals) உற்பத்தி செய்த ‘ஒன்டன்செட்ரான்‘ (Ondansetron) என்ற ஊசி மருந்து தரமற்றது என்பதால், அதன் பயன்பாட்டை உடனடியாக நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டது. பின்னர் அதே நிறுவனத்தின் மேலும் 10 மருந்து வகைகளின் பயன்பாடும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

கண்டி தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளிகளுக்கு ஏற்பட்ட கிருமித் தொற்று காரணமாகவே இந்த விவகாரம் வெளிச்சத்திற்கு வந்தது. ஏழு நோயாளிகளுக்கு ஒரே மாதிரியான கிருமித் தொற்று ஏற்பட்டிருந்தது. இது குறித்து ஆய்வு செய்தபோது, அவர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட ‘ஒன்டன்செட்ரான்‘ மருந்துக் குப்பிகளுக்குள் ‘ரைசோபியம்‘ (Rhizobium) என்ற பக்டீரியா இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த மருந்தைப் பயன்படுத்திய பின்னர் இரண்டு இறப்புகள் பதிவாகியுள்ளன என்று செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், டிசெம்பர் முதல் வாரத்தில் ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையிலும் இதுபோன்ற பல சம்பவங்கள் நடந்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கண்டி வைத்தியசாலை ஆய்வுகளைச் செய்து அறிவிக்கும் வரை சுகாதார அமைச்சோ அல்லது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையோ ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேள்வியெழுப்புகிறது.

இந்த மருந்துகள் புற்றுநோய் சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் உள்ள கவலைக்கிடமான நோயாளிகளுக்கு வழங்கப்படுபவை. குருதியில் நேரடியாக ஏற்றப்படும் இந்த மருந்துகள் கிருமித் தொற்றுடன் வழங்கப்பட்டது பெரும் குற்றமாகும். இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் தரத்தைப் பரிசோதிக்க சர்வதேச தரத்திலான ஆய்வகம் (Quality Assurance Lab) ஒன்று இன்னும் அமைக்கப்படவில்லை. இது குறித்து பல வருடங்களாக கோரிக்கை விடுக்கப்பட்டும், ஆளும்தரப்பு அதற்குப் நிதி ஒதுக்காமல் வேறு தேவையற்ற விடயங்களுக்கு நிதி ஒதுக்குவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தத் தரமற்ற மருந்துகளால் பாதிக்கப்பட்ட அல்லது உயிரிழந்த நோயாளிகளுக்கு ஆளும்தரப்பு மற்றும் சம்பந்தப்பட்ட மருந்து நிறுவனம் நட்டஈடு வழங்க வேண்டும். உள்நாட்டிலேயே மருந்து தரப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் ஆய்வகத்தை உடனடியாக நிறுவ வேண்டும். தரமற்ற மருந்துகளை நாட்டுக்குள் கொண்டுவர அனுமதித்த மற்றும் தமது கடமையைச் செய்யத் தவறிய அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த மருந்துகள் கடந்த செப்டம்பரிலேயே இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. எத்தனை ஆயிரம் நோயாளிகளுக்கு இந்தத் தரமற்ற மருந்துகள் இதுவரை ஏற்றப்பட்டன என்பது குறித்த முறையான விசாரணை அவசியம் என நாம் வலியுறுத்துகின்றோம் - என்றார்.

# வாக்குறுதி அளித்தபடி ஜனவரி முதல் தோட்ட தொழிலாளர் சம்பள அதிகரிப்பு

இயற்கை பேரிடர்ங்களால் தேயிலை தொழிற்துறைக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த மதிப்பீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் அந்த பாதிப்புக்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் தாக்கம் செலுத்தாது. வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய ஜனவரி முதல் சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டு சந்தையில் தேயிலை விலையில் எவ்வித அதிகரிப்பும் இல்லை. எனினும் பெருந்தோட்டப் பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக சில தினங்களுக்கு தேயிலை பறிக்க முடியாத நிலைமை காணப்பட்டது. தற்போது மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளதால், தேயிலை தொழிற்துறையும் வழமை போன்று இயங்குகிறது. பேரிடர்களால் பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேயிலை தொழிற்துறைக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த மதிப்பீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே அதில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கமைய பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் நிச்சயம் வழங்கப்படும். ஜனவரியிலிருந்து இந்த சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும். அதற்கமைய பெப்ரவரி 10 தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளம் கிடைக்கப் பெறும்.

உண்மையில் இந்த சம்பள அதிகரிப்பிற்கு பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பில் கம்பனிகள் 200 ரூபா பங்களிப்பினையும், ஆளும்தரப்பு 200 ரூபா பங்களிப்பினையும் வழங்குகிறது. அதற்கமைய தொழிலாளர்களுக்கு எவ்வித தடையும் இன்றி இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் - என்றார்.

# இந்தியாவுடனான இரகசிய ஒப்பந்தத்திலிருந்து இனியாவது விலகவேண்டும் இலங்கைத்தரப்பு

## விமல் வீரவன்ஸ வலியுறுத்து

இந்தியாவின் தரம் குறைவான மருந்து மாபியாவுக்கு எமது நாட்டின் அப்பாவி மக்களை பலி கொடுக்கும் கொடூரம் தற்போது அரங்கேறியுள்ளது. கொழும்புமேயர்பல்தசாரின்சகோதரியின் கனவனுடைய நிறுவனத்தின் ஊடாகவே சர்ச்சைக்குரிய இந்திய மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. மக்களின் உயிரை துச்சமாக மதிக்காமல் இனியாவது இந்தியாவுடனான இரகசிய ஒப்பந்தத்திலிருந்து விலகுமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஆளும்தரப்பிடம் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை செய்தியாளர்களிடம்இதனைவலியுறுத்திய அவர், மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவின் தரம் குறைவான மருந்து மாபியாவுக்கு எமது நாட்டின் அப்பாவி மக்களைக் காவு கொடுக்கும் கொடூரம் தற்போது அரங்கேறியுள்ளது. முன்னர்எமதுநாட்டில்பயன்படுத்தப்படும் மருந்துகள் பிரித்தானிய தரத்தில் அல்லது அதற்கு உயர் தரத்தைக் கொண்டவையாகவே காணப்பட்டன. கடந்த76ஆண்டுகாலஆட்சியில்இந்தத தரம் ஒருபோதும் குறையவில்லை. ஆனால் 76 ஆண்டு கால சாபத்தை நீக்குவதாகக்கூறிஆட்சிக்குவந்தஜே.வி.பி. ஆளும்தரப்பு இந்தியாபாமகோபியாவின் பிடிக்குள் சிக்கி மக்களை அதற்கு பலியாக்கிக் கொண்டிருக்கிறது.

உலகில் சுமார் 33 நாடுகளிலேயே இந்தியா பாமகோபியா அங்கீகரிக்கப் பட்டுள்ளது. ஆபிரிக்கா போன்ற வறுமை நிலையிலுள்ள நாடுகளைத் தவிர, அபிவிருத்தியடைந்த நாடுகள் இதனை அங்கீகரிக்கவில்லை. ஆனால் எமது ஆளும்தரப்பு இதனை அங்கீகரித்து மக்களின் உயிர் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது. இதுவரையில் இரு யுவதிகள் உயிரிழந்துள்ளனர். ஜயவர்தனபுர வைத்தியசாலையிலும் சில நோயாளர்களிடம் ஒவ்வாமை பதிவாகியுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேயர் பல்தசாரின் சகோதரியின்கணவனுடையநிறுவனத்தின் ஊடாகவே இந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவனம் மாத்திரமின்றி ஆளுந்தரப்பிலுள்ள மேலும் பல்வேறு முக்கிய புள்ளிகளுடன் தொடர்புடைய நிறுவனங்களும் இதில் உள்ளடங்குகின்றன. இந்தத்தரம்குறைந்த மருந்துகளால் பதிவான யுவதிகளின் உயிரிழப்புக்களுக்கு யார் பொறுப்புக் கூறுவது? அவர்களது குடும்பங்களுக்கு யாரால் நியாயத்தை வழங்க முடியும்? இதுமனிதப்படுகொலையல்லவா? இதற்கு பொறுப்பு கூற யாரும் இல்லையா?

இந்திய பாமகோபியாவுக்குள் சிக்கி அப்பாவி மக்களின் உயிரைப் பறிப்பதற்கான அனுமதியை நாட்டு மக்கள் அநுரகுமார திஸாநாயக்கவுக்கோ அல்லது நளிந்த ஜயதிஸ்ஸவுக்கோ வழங்கவில்லை. இந்தியாவுடன் இரகசியமாக செய்து கொள்ளப்பட்ட 7 பிரதான ஒப்பந்தங்களில் இந்தியன் பாமகோபியாவுடனான ஒப்பந்தமும் உள்ளடங்குகிறது. இதற்கு முன்னர் எந்தவொரு அரசுத் தலைவரும் இவ்வாறு தரம் குறைவான இலவச சுகாதார சேவையை வழங்கவில்லை. ஆனால் தற்போதிருப்பது தரக்குறைவான மருந்துகளை வழங்கி மக்களை கொல்லும் ஆளும்தரப்பாகும். எனவே இனியாவது இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம். தேசத்திடம் மன்னிப்பு கோருங்கள் - என்றார்.

# 206 மில்லியன் டொலர் நாணய நிதியம் உதவி

'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட பேரனர்த்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு அவசரத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும், பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்குமென 206 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின்இயக்குநர்சபைஒப்புதல்அளித்துள்ளது.

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டம் குறித்த 5 ஆம் கட்ட மீளாய்வு தொடர்பில் ஆளும்தரப்புக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் எட்டப்பட்ட உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு இயக்குநர் சபையின் ஒப்புதலுக்காக டிசெம்பர் 15 பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட 'தித்வா' சூறாவளியினால் நாடு மிகமோசமான பேரழிவுக்கு முகங்கொடுத்ததை அடுத்து, துரித நிதியளிப்புத் திட்டத்தின்கீழ் 200 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை ஆளும்தரப்பு வேண்டுகோள்விடுத்தது.

அதனையடுத்துஇதுகுறித்துஅறிவிப்பொன்றை வெளியிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கானசெயற்திட்டப்பணிப்பாளர்எவான் பபஜோர்ஜியோ, துரித நிதியளிப்புத் திட்டத்தின்கீழ் இலங்கை ஆளும்தரப்பினால் முன்வைக்கப்பட்ட அவசர நிதியுதவிக் கோரிக்கைக்கே தற்போது முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாகவும், விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்திட்டம் குறித்த 5 ஆம் கட்ட மீளாய்வைப் பூர்த்திசெய்வது பற்றிய கலந்துரையாடல்களை மீளத் தொடங்குவதற்கு அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் தமது அதிகாரிகள் குழுவொன்று நாட்டுக்கு வருகைதரும் எனவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் துரித நிதியளிப்புத் திட்டத்தின்கீழ் இலங்கை விடுத்த நிதியுதவிக் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்கு வெள்ளிக்கிழமை இலங்கை நேரப்படி இரவு 10.30 மணிக்கு வொஷிங்டனில் கூடிய சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குநர் சபை, 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட பேரழிவின் விளைவாக எழுந்திருக்கும் அவசரத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும், பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கும் இலங்கைக்கு 206 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

அதேவேளை பேரரிடரினால் ஏற்பட்ட தாக்கத்தினை மதிப்பீடு செய்வதற்கும், இத்தாக்கத்திலிருந்து மீள்வதற்கும் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்குமான முயற்சிகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டத்தின் ஊடாக எவ்வாறு செயற்திறன்மிக்கவகையில்ஆதரவளிக்கமுடியும் என்பதை மதிப்பீடு செய்வதற்கும் தேவையான காலப்பகுதியினைக் கருத்திற்கொண்டு, விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டம் குறித்த 5 ஆம் கட்ட மீளாய்வு ஒத்திவைக்கப்படுவதாகவும், 2026 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இதுபற்றிய கலந்துரையாடல்கள் மீள ஆரம்பமாகும் எனவும் நாணய இயக்குநர் சபை அறிவித்துள்ளது.

இதுகுறித்துசர்வதேசநாணயநிதியத்தின்பிரதி நிறைவேற்றுப்பணிப்பாளரும்,பதில்தலைவருமான கென்ஜி ஒகமுராவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையைத் தாக்கிய மிகமோசமான சூறாவளியினால் 600 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதுடன்பலஇலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளம் மற்றும் மண்சரிவினால் இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்திருப்பதுடன், முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகள் அழிவடைந்து, நாடு முழுவதும் மக்களின் வாழ்வாதாரங்கள் சூறையாடப்பட்டுள்ளன. இப்பேரனர்த்தமானது அவசர மனிதாபிமான மற்றும் புனரமைப்புத் தேவைகளை உருவாக்கி, குறிப்பிடத்தக்க இறைசார்அழுத்தங்களையும்சென்மதிநிலுவைத் தேவைப்பாடுகளையும் தோற்றுவித்துள்ளது. இந்நிலையில் துரித நிதியளிப்புத் திட்டத்தின்கீழ் சர்வதேசநாணயநிதியத்தினால்வழங்கப்படவுள்ள அவசரகால நிதியுதவியானது இவ்வழுத்தங்களை நிவர்த்திசெய்வதற்குத்துணைபுரியும்.இதனிடையே அவசியமேற்படுமாயின், நிதியியல் முறைமைக்கு அவசியமான திரவத்தன்மைசார் ஆதரவினை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கி தயாராக இருக்கின்றது.

அதேபோன்று மீட்சி மற்றும் சீரமைப்பு சார்ந்த தேவைகள் கணிசமானளவில் காணப்படும் தற்போதையசூழ்நிலையில்,இறைமற்றும்படுகடன் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கும் வகையில் இறை முன்மீதியைப் பேணுவதில் இலங்கை அதிகாரிகள் அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். சகல அவசரகால செலவினங்களும்பகிரங்கநிதிசார்முகாமைத்துவச் சட்டத்துடன் முழுமையாக இணங்கியொழுகும் விதத்தில் மேற்கொள்ளப்படவேண்டும். அத்தோடு அவை வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் தரநியமங்களுக்கு ஏற்புடைய விதத்தில் முறையான கண்காணிப்பு மற்றும் சீரான பகிரங்க அறிக்கையிடல் என்பவற்றுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

தீவிர பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டுவரும் வேளையிலும், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டம்உரியவாறுபலனளித்துவரும் சூழ்நிலையிலுமே இப்பேரனர்த்தம்ஏற்பட்டுள்ளது. இருப்பினும்வலுவானமறுசீரமைப்புச்செயற்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுவதானது ஸ்திரமான பொருளாதார மீட்சி, விலை உறுதிப்பாடு, கணிசமான இறைத்திரட்சி மற்றும் வெளிநாட்டுக்கையிருப்பில் முன்னேற்றம் என்பவற்றை அடைந்துகொள்வதற்குத் துணைபுரிந்துள்ளது.எனினும்பொருளாதாரமானது தொடர்ந்தும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தி நெருக்கடிக்கு முன்னரான மட்டத்துக்கு மீட்சியடையாதுள்ளது.

இவ்வேளையில் இலங்கை அதிகாரிகளும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளும் நெருக்கமானதொடர்புகளைப்பேணிவருவதுடன், அடுத்தகட்டக்கலந்துரையாடல்கள்வெகுவிரைவில் மீளஆரம்பிக்கப்படும். இக்கடினமானதருணத்தில் நாணயநிதியம்இலங்கைமக்களுடன்தோளோடு தோள் நிற்பதுடன் இலங்கையின் மீட்சி மற்றும் மீளக்கட்டியெழுப்பல் முயற்சிகளுக்குத்தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வரும் பண்டிகைக் காலங்களில் விசேட பாதுகாப்பு நடவடிக்கை

எதிர்வரும்பண்டிகைக்காலத்தில் மதவழிபாட்டுத்தலங்களுக்குவிசேட பாதுகாப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக பெருமளவான மேலதிக பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகபொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யூ. வுட்லர் தெரிவித்தார்.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது:

பண்டிகைக் காலத்தில் மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பல்வேறு மத நடவடிக்கைகளில் ஈடுபடும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்காக சிவில் உடையில் பொலிஸ்உத்தியோகத்தர்கள்மற்றும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும் ஈடுபடுத்தப்படுவார்கள். மேலும், இந்த அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் முப்படையினரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும். பண்டிகைக் காலத்தை பாதுகாப்பான முறையில் முன்னெடுப்பதற்கான விசேட திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளது.

அனைத்து தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் நிலையப் பொறுப்பதிகாரிகள் அந்தந்த பொலிஸ் பிரிவுகளில் உள்ள அனைத்து மதத் தலங்களின் தலைவர்களையும் சந்தித்து, எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள அனைத்து மத நிகழ்ச்சிகளுக்கும் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுப்பார்கள்.

இப்பண்டிகைக் காலத்தில் மத வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் மற்றும் மத வழிபாடுகளில் ஈடுபடும் பொதுமக்களிடம் நாங்கள் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நீங்களும் இது குறித்து அவதானமாக இருந்து, ஏதேனும் சந்தேகத்திற்குரிய நபர், குழு அல்லது பொருட்கள் குறித்து சந்தேகம் ஏற்பட்டால், அருகில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தருக்கு அறிவிக்க முடியும்.

இந்த அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் முப்படையினரையும் இணைத்துக் கொண்டு இத்திட்டம் பாதுகாப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு அருகில் சிவில் உடையில் பல பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் மட்டும் 2,500-க்கும் மேற்பட்ட மேலதிக பொலிஸ் உத்தியோகத்தர்கள் இத்திட்டத்திற்கு பங்களிப்பு வழங்குகின்றனர் என்றார்

காலைக்கதிர் Kalaikkathir

## போதைப்பொருள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகளவில் இந்த துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர். அதனை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. எனவேஇந்தவிடயத்தில் எமது தலையீடு அத்தியாவசியமானதாகும்.

போதைப்பொருட்களை விற்பனை செய்யும் மத்திய நிலையமாக பல்கலைக்கழக பீடமொன்று காணப்படுகின்றமை தொடர்பில் எமக்கு புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளன. பெயர் உள்ளிட்டவற்றுடன் இந்தத் தகவல்கள் கிடைத்துள்ளன. இவற்றை உடனடியாகக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், எம்மால் இந்த பல்கலைக்கழக கட்டமைப்பை பாதுகாக்க முடியாது.

பகிடிவதை என்ற பெயரில் அரங்கேறும் துன்புறுத்தல்களை இல்லாதொழிக்கவும், போதைப்பொருள் பாவனையை முற்றாக அழிக்கவும் அனைவரும் இணைந்து செயற்படுவோம் என அழைப்பு விடுக்கின்றேன் என்றார்.

## கஞ்சா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சூரியகந்த பொலிஸாரினால் கஞ்சா பயிர் செய்கையொன்று முற்றுகையிடப்பட்டமை பெரும்பேசு பொருளானது. குறித்த கஞ்சா பயிர் செய்கையுடன் அரசியல்வாதியொருவரும் தொடர்புபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்தே சமூகத்தில் அது குறித்து பெரும்ளவில் பேசப்பட்டது. சூரியகந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லால் பெரேராவுடன் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களான சுசந்த ஹெட்டியாராச்சி மற்றும் சமிந்த விஜேரத்ன ஆகியோர் இந்த சுற்றிவளைப்பினை முன்னெடுத்திருந்தனர்.

இந்த சுற்றி வளைப்பின் பின்னர் ஜனிந்து சந்தருவான் உதயங்க என்ற நபருக்கு எதிராக கஞ்சா பயிர் செய்கையில் ஈடுபட்டமை தொடர்பில் எம்பிலிபிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் போது குறித்த சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். குறித்த சந்தேகநபருக்கு எதிராக 2023இலும் இதேபோன்றதொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதிலும் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டுதண்டனைக்குட்படுத்தப்பட்டிருந்தார். இந்நிலையில் இந்த சுற்றி வளைப்பினை மேற்கொண்ட சமிந்த விஜேரத்ன என்ற பொலிஸ் உத்தியோகத்தர் தண்டனை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அது மாத்திரமின்றி இந்த சுற்றி வளைப்புடன் தொடர்புடைய ஏனைய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் பாரதூரமான நிலைமையாகும். இந்த கஞ்சா பயிர் செய்கையுடன் குறிப்பிட்டவொரு அரசியல்வாதிக்கு எவ்வித தொடர்பும் இல்லையெனில் அவரால் அதனை இலகுவாக நிரூபிக்க முடியும். அதனை விடுத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி பொலிஸார் மீது நடவடிக்கை எடுப்பது அடிப்படையற்றது. மஹிந்த ஜயசிங்க, ரஞ்சன் ஜயலால், வசந்த சமரசிங்க மீது தொடுக்கப்பட்ட சில வழக்குகள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டு, காலம் தாழ்த்தப்பட்டு தற்போது செயலிழக்கச் செய்துள்ளன.

வலுசக்தி அமைச்சர் மீது வழக்கு தாக்கல் செய்யுமாறு இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு பரிந்துரைத்திருந்த போதிலும், வழக்கு தாக்கல் தொடர்ந்தும் காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று அஷோ ரன்வலவை பாதுகாப்பதற்காக செயற்பட்டதாக குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவரை பொலிஸில் முன்னிலைப்படுத்தாமல் கட்சி செயற்பாட்டாளர்களுடன் இணைந்து அந்த நடவடிக்கை எடுத்ததாக அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த சம்பவங்கள் நாட்டில் சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை தெளிவாகக் காண்பிக்கின்றன. எனவே சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி பொறுப்புக்களை தட்டிக்கழிக்காமல் உண்மைகளை வெளிப்படுத்த வேண்டியது இந்த அதிகாரிகளின் கடமையாகும் என்றார்.

## பாஜகவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பினைக் கொண்டுவருவதற்கான அழுத்தங்களை இந்தியா பிரயோகிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் நயினார் நாகேந்திரனிடம் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்நாடு சென்றுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆகியோர் அடங்கிய குழு அங்கு கட்சித் தலைவர்களைச் சந்திதுப் பேசி வருகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர், சீமான ஆகியோரைச் சந்தித்துப் பேசிய இந்தக் குழுவினர் திராவிடர் கழகத் தலைவர் வீரமணியை வெள்ளிக்கிழமை (19) பெரியார் திடலிலும், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவரும் தமிழக சட்டமன்ற உறுப்பினருமான வேல்முருகனை அவரது அலுவலகத்திலும் சந்தித்தனர்.

பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் நயினார் நாகேந்திரனை அக்கட்சியின் மாநில தலைமையகமான கமலாலயத்தில் நேற்று சனிக்கிழமை (20) சந்தித்த குழுவினர், தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வாக இலங்கை அரசு 'ஏக்கிய இராச்சிய' அரசமைப்பினைத் திணிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் அதனைத் தடுத்து தமிழர்களுக்கான அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அரசமைப்பினைக் கொண்டுவருவதற்கான அழுத்தங்களை இந்தியா கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

அத்தோடு இருநாடுகளுக்கும் இடையில் தீர்வின்றித் தொடரும் மீனவர் பிரச்சினை குறித்தும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.



# எமது எண்ணக்கருக்களே ஆளும்தரப்பின் கொள்கை

## பெருமைப்படுகிறார் சஜித் பிரேமதாச

இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் கூறிய விடயங்களைப் பார்த்து அரசுத் தலைவர் தலைமையிலான ஆளும்தரப்பு கேலி செய்தாலும், எமது கருத்துக்களை விமர்சித்த எமது எண்ணக்கருக்களையே அரசின் தேசியக் கொள்கையாக நாடாளுமன்றத்தில் அறிவிப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இறுதியில் உண்மை வெல்லும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

'தித்வா' புயலால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் கடுமையாக பாதிக்கப்பட்ட கேகாலை மாவட்டம், அரநாயக்க பிரதேச மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ் அரநாயக்க பிரதேச வைத்தியசாலைக்கு 29 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் நேற்று நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்ததாவது:

இடம்பெயர்ந்துள்ள மற்றும் வீடற்றிருக்கும் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான காணிகளில் வீடுகளைக் கட்டுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். பாதுகாப்பற்ற இடங்களில் குடியிருந்தவர்களே பேரிடர்ம் காரணமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஆகையால், பாதுகாப்பான காணிகளில் தரமான வீடுகளை அமைத்து, அவர்கள் அங்கிருந்தே தமது வாழ்க்கையை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை ஆளும்தரப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கல்வி, சுகாதார வசதிகள் மற்றும் வாழ்வாதாரம் உள்ளிட்ட அனைத்தும் ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றின் ஊடாக இவை முன்னெடுக்கப்பட வேண்டும்.

யாரும் 'தித்வா' புயலை ஒரு சாதாரண விடயமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இவ்வாறான அலட்சியமான பார்வையால்தான், சுனாமியிலிருந்து கூட நம்மால் பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியாமல் போனது. இன்றும் கூட ராடார் அமைப்புகளை நிறுவிக் கொள்ள முடியாமல்தானே போயுள்ளது? இயற்கை பேரிடர்ங்களை நாம் தொடர்ந்து சந்திக்க இதுவே காரணமாகிறது. இவற்றை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. உயிரிழப்புகள் விடயத்தில் நாம் ஒருபோதும் மகிழ்ச்சியடையப்போவதில்லை.'

நமது நாட்டில் பேரிடர்த்திற்குப் பின்னரான இடர் முகாமைத்துவ செயற்பாட்டில் குழப்பம் நிலவுவது கவலையான விடயமாகும். தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை ஆபத்தானவை என்று அறிவிக்கும்போது, ஆளும்தரப்பு மக்களை இடைத்தங்கல் முகாம்களுக்கு கொண்டு வந்து, பின்னர் மீண்டும் அந்த ஆபத்தான பகுதிகளுக்கே திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளைச் செய்து வருகிறது. இவை அபத்தமான செயற்பாடுகளாகும்.

அதிக ஆபத்துள்ள பகுதிகளுக்கு மக்களை அனுப்புவதன் மூலம் மீண்டும் பிரச்சினை ஏற்பட்டால் அதற்கு ஆளும்தரப்பே முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும். உயிரிழப்புகளுக்கு இனியும் இடமளிக்க முடியாது. மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்காக 500 பில்லியன் ரூபா குறைநிரப்பு மதிப்பீட்டிற்கு நாம் ஆதரவு வழங்கினோம். எனவே இந்த உதவிகளை உடனடியாக மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த உதவிகளை வழங்கும் நடவடிக்கைகள் முறையானதாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுக்கப்பட வேண்டும். தயவுசெய்து முரண்பாடான அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்த்து, அரச அதிகாரிகளை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்காமல் உதவிகளைப் பெற்றுக் கொடுங்கள். மக்கள் மத்தியில் கோபத்தை தூண்டிவிடும் கருத்துக்களை முன்வைக்க வேண்டாம் என்றும் ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன்.

நிவாரணத் திட்டமாக ஐக்கிய மக்கள் சக்தி வைத்தியசாலைகளுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறது. இந்தப் பேரழிவை நாட்டிற்கு சௌபாக்கியத்தைக் கொண்டுவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றே நான் தொடர்ச்சியாகக் கூறி வருகிறேன். சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டைக் கூட்டி, உலகின் அனுதாபங்களையும் உதவிகளையும் பெறுவதன் மூலம், நாடு முன்பு இருந்ததை விட குறிப்பிடத்தக்க அபிவிருத்தியை எட்ட முடியும். ஆளும்தரப்பு இதனை நடத்தாமல் இருக்க முயற்சிக்கிறதா என்று தெரியவில்லை. நாட்டுக்காக நாம் சரியானதை சரியான நேரத்தில் செய்ய வேண்டும். இந்த நன்கொடையாளர் மாநாட்டை நடத்தும் பட்சத்தில், கட்சி வேறுபாடுகள் இன்றி எமது முழுமையான ஆதரவைத் தருவோம் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு எதிர்கொள்ளும் சவால்களை தீருங்கள்

## அரசுத் தலைவருக்கு சட்டத்தரணிகள் சங்கம் கடிதம்

தகவல் அறியும் உரிமைகள் (யூவீணூ) ஆணைக்குழுஎதிர்கொள்ளும் முக்கியமான சவால்களைத் தீர்க்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (யபுறீஸி), தலைவர் அநுரகுமாரவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத் தலைவர் ராஜீவ் அமரசூரிய இது தொடர்பில் எழுதிய கடிதத்தில், ஆணைக்குழுவின் சுதந்திரம் மற்றும் செயல்திறனை அச்சுறுத்தும் பணியாளர் பற்றாக்குறை மற்றும் போதுமான நிதி இல்லாத பிரச்சினைகளை எடுத்துரைத்துள்ளார்.

ஆணைக்குழுவின் ஒரு தசாப்த கால சேவையைப் பாராட்டியுள்ள சங்கம், அதற்கு வழங்கப்பட்டுள்ள ஆணையைப் பாதுகாக்க போதுமான நிதி ஆதாரங்களின் அவசியம் குறித்தும் அரசுத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பொதுமக்களின் அணுகலைக் கட்டுப்படுத்தக்கூடிய எந்தவொரு திருத்தங்களையும் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது மற்றும் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படுவதற்கு முன்பு மக்களுடன் கலந்தாலோசிக்கவும் வலியுறுத்தியது.

## முன்னாள் அட்மிரலின் விடுவிப்பை எதிர்த்து சட்டமா அதிபரிடம் முறையீடு

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் 11 இளைஞர்கள் கப்பம் பெறுவதற்காக கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய விடுவிக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை விடுவித்தமைக்கு எதிராக சட்டமா அதிபரிடம் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கோட்டை நீதிவான் இசுரு நெத்திகுமாரவிடம் கடந்த 17ஆம் திகதி அறிவித்தது.

இந்த விடுவிப்பு சட்டமா அதிபரினால் மேற்கொள்ளப்பட்டதனால், இது குறித்து மீண்டும் பரிசீலிக்கப்படுவதாயின், அடுத்த கட்டம் குறித்து உடனடியாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதித்துவம் ஊடாக மன்றுக்கு அறிவிக்குமாறு நீதிவான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் இரண்டாவது சந்தேகநபராகப் பெயரிடப்பட்டிருந்த முன்னாள் பாதுகாப்பு பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி ரவீந்திர விஜேகுணரத்னவை விடுவித்தமை தொடர்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவு அறிவித்ததையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

'இந்த வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டுள்ளது. அவர் சட்டமா அதிபரினால் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு விசாரணைக்காக நான்காவது தடவையாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இனி எந்தக் காரணத்திற்காகவும் திகதி வழங்கப்படமாட்டாது. அரச சட்டத்தரணிக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விசாரணையை மீண்டும் மீண்டும் ஒத்திவைக்குமாறு கோர வேண்டாம். இச்சம்பவம் நடந்து நீண்ட காலம் கடந்துவிட்டது. வேறெந்த விடயத்திற்காகவும் விசாரணையைத் தள்ளிப்போட முடியாது' எனத் தெரிவித்த நீதிவான், சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று பிரதிநிதி ஒருவருடன் முன்னிலையாகுமாறு குற்றப்புலனாய்வுப்பிரிவுக்கு உத்தரவிட்டார்.

இரண்டாவது சந்தேகநபரின் விடுவிப்பு தொடர்பாக சட்டமா அதிபர், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன மன்றுக்குத் தெரிவித்தார். இந்தச் சந்தேகநபருக்கு எதிராகப் போதுமான சாட்சிகள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, பிரதிவாதிகள் தரப்பு சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், இச்சம்பவம் தொடர்பான ஆரம்பத் தகவல்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை குற்றப்புலனாய்வுப்பிரிவிடம் கோரியும் கிடைக்கவில்லை என மன்றுக்குத் தெரிவித்தனர். இதனைப் பரிசீலித்த நீதிவான், இதற்கு விசேட கட்டளைகள் தேவையில்லை என்றும், ஒரு வார காலத்திற்குள் அந்த ஆவணங்களின் பிரதிகளை பிரதிவாதிகள் தரப்பிற்கு வழங்குமாறும் குற்றப்புலனாய்வுப்பிரிவுக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவத்தின் பிரதான சந்தேகநபர்களில் ஒருவரான முன்னாள் கடற்படை லெப்டினண்ட் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி தலைமறைவாகஇருப்பதற்குஉதவியளித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு பகிரங்க நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி மற்றும் அவர் தங்கியிருந்த தென்னந்தோட்டத்தைப் பராமரித்த லக்ஸிரி அமரசிங்க ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கின் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உதவி வழங்குவது தொடர்பில் ஆராய இலங்கை வருகிறது எமிரேட்ஸ் குழு

இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு (எமிரேட்ஸ்) இடையிலான நீண்டகால நட்புறவின் அடிப்படையில், சேதங்களின் அளவை மதிப்பிடவும் வழங்கக்கூடிய மேலதிக உதவிகளைத் தீர்மானிக்கவும் ஒரு குழுவைஇலங்கைக்குஅனுப்பவுள்ளதாக ஐக்கிய அரபு இராச்சிய அரசுத் தலைவர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான், அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அரசுத் தலைவர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானுடன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் கடும் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய அரபு இராச்சியம் வழங்கிய விரைவான மனிதாபிமான உதவிகளுக்காக அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதன் போது நன்றி தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது, வெள்ளத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்காகஅரசுத்தலைவர்க்கும் இலங்கை மக்களுக்கும் ஷேக் முகமது பின் சயீத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். அத்துடன், இந்த இயற்கை பேரிடர் சவால்களை எதிர்கொண்டு நாடு பாதுகாப்பாகவும் மீண்டுவரவும்தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவின் அடிப்படையில், சேதங்களின் அளவை மதிப்பிடவும் வழங்கக்கூடிய மேலதிக உதவிகளைத் தீர்மானிக்கவும் ஒரு குழுவை இலங்கைக்கு அனுப்பவுள்ளதாக அமீரக அரசுத் தலைவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இயற்கைப் பேரிடர்ங்கள் மற்றும் அவசர காலங்களால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு உடனடி நிவாரணம் மற்றும் நீண்டகால மீட்சியை மையமாகக் கொண்டு சரியான நேரத்தில் ஆதரவை வழங்கும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் நீண்டகால மனிதாபிமானக் கொள்கையின் ஒரு பகுதியாக இந்த உதவி அமைகிறது எனக் குறிப்பிட்ட அவர், இலங்கையுடன் உறுதியாக நிற்பதற்கான தனது நாட்டின் அர்ப்பணிப்பை மீள உறுதிப்படுத்தினார்.

கூட்டு நடவடிக்கைக் கட்டளை, சர்வதேச உதவிக்கான அமீரக முகவர் நிறுவனம் மற்றும் எமிரேட்ஸ் ரெட் கிரசண்ட் ஆகியவற்றின் மூலம் அவசர நிவாரண நடவடிக்கைகள் விரைவாகத் தொடங்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளில் அபுதாபி சிவில் பாதுகாப்புப் படையினரால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள், அத்துடன் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் அவசர தங்குமிடப் பொருட்கள் விநியோகம் என்பன உள்ளடங்குகின்றன.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இந்த உடனடிப் பிரதிபலிப்பை இலங்கை அதிகாரிகள் வரவேற்றுள்ளனர். இது தற்போதைய நிவாரண முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட முக்கிய பங்களிப்பாகவும், இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான மற்றும் நீண்டகால உறவின் பிரதிபலிப்பாகவும் அமைந்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## பாணந்துறையில் ஒருவர் கைது

60 இலட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவர் பாணந்துறை தெற்கு தலைமையக பொலிஸாரால் நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பாணந்துறை, வேகட பகுதியைச் சேர்ந்தவர்எனபொலிஸார்தெரிவித்தனர்.

தலைமையக பொலிஸ் பரிசோதகர் உபுல்பிரியங்கரவுக்குக்கிடைத்ததகவலின் அடிப்படையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 5 கையடக்கத் தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு சம்பவம்தொடர்பில்பாணந்துறை தெற்கு தலைமையக பொலிஸார் மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.12.2025இல் வெளியிடப்பெற்றது